1973 மார்ச் 1]

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** பெருவாரியான அரிசன மக்கள் இருக்கின்ற இடங்களிலே, 500-க்கு மேற்பட்ட மக்கள் இருக்கக்கூடிய இடங்களிலே நாம் திட்டத்தைக் கொண்டு வருகிறோம். அதற்காக கிணறுகள் வெட்டப்படுகின்றன. அதற்கு மேற்பட்ட மக்கள் இருப்பார்களானால் மேல்நிலை நீர்த் தொட்டி கட்டப்பட்டு தண்ணீர் வழங்கப்படுகிறது.

**திரு. தி. பொன்னுமலை:** அரிசனக் குடியிருப்புகளுக்கு மேல்நிலை நீர்த் தொட்டி கட்டித் தருவதில்லை. தரை மட்டத் தொட்டிதான் கட்டுகிறார்கள். மேல் நிலை நீர்த் தொட்டி கட்டுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** சில இடங்களிலே தரை மட்ட தொட்டி கட்டித்தரப்படுகிறது. சில இடங்களிலே மேல்நிலை நீர் தொட்டி கட்டித்தரப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த எந்த இடங்களில் மேல்நிலை நீர்த் தொட்டிகள் கட்டப்பட்டிருக்கின்றன என்ற விவரம் கேட்டால் விவரம் சொல்லலாம்.

## வேலைவாய்ப்புகள் குறித்த ஆய்வு

* 198 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குறுகிய காலத்தில் வேலைவாய்ப்புகளை அளிப்பதற்கான யோசனை கூற திரு. பி. பகவதி அவர்கள் தலைமையில் வேலையின்மை ஆய்வுக் கமிஷன் ஒன்றினை மத்திய அரசு அமைத்துள்ளது பற்றி நமது மாநில அரசுக்குத் தகவல் அறிவிக்கப்பட்டதா?

(இ) அக்குழுவினர் வேலையின்மையைப் போக்க தெரிவித்துள்ள திட்டங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) & (இ) பேரவைமுன் வைக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில்@ விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, வேலையின்மைகுறித்து ஆராய்வதற்காக பகவதி அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைத்து அந்தக் குழு இன்னும் அறிக்கையை அளிக்கவில்லையென்றாலும் இடைக்கால அறிக்கை ஒன்றை அது அளித்திருப்பதாகவும் அதனுடைய பிரதியொன்று நம்முடைய அரசுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் அது பரிசிலனையில் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அவற்றிலே எவையெவை நடைமுறைக்குக் கொண்டு வரப்பட இருக்கின்றன என்ற விவரத்தை அறிவிக்க இயலுமா?

---

@ 389-394-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது மத்திய அரசாங்கம் சம்பந்தப்பட்ட விஷயம். மாநில அரசுக்குச் சம்பந்தமில்லை. எதை மத்திய அரசு நிறைவேற்ற வேண்டுமென்று சொல்கிறதோ அது பற்றி மாநில அரசு பரிசீலிக்கலாம்.

THIRU K. M. SUBRAMANIAM : Since Tamil Nadu happens to be the second largest State with a maximum number of unemployed, is there any proposal under the consideration of the Government for the appointment of a similar commission in Tamil Nadu to solve this problem ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இங்கே வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையைப்படித்துப் பார்த்தால் தெரிந்துகொள்ளலாம். திட்ட வேலைகளை அதிகமாக்கிளுல் வேலைவாய்ப்பு தன்னுலே அதிகமாகும் என்றுதான் கூறப்பட்டு இருக்கிறது. எனவே, அதற்காக ஒரு குழுவை இங்கே அமைக்கத் தேவையில்லை. அவர்களுடைய அறிக்கையிலேயே சொல்லியிருக்கிருர்கள். திட்டங்களை எங்கே உண்டாக்குகிறோமோ அங்கே வேலைவாய்ப்பு ஏற்படும் என்று.

**திரு. கோவை செழியன் :** அரசாங்க நிறுவனங்களிலே வேலைக்கு ஆட்களைச் சேர்க்கும்பொழுது எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ் மூலம்தான் ஆட்களைச் சேர்க்கிருர்கள். 1962 ஆம் ஆண்டு சட்டப்படி தனியார் நிறுவனங்களில், அரசாங்க உதவி பெறுகிற தனியார் நிறுவனங்களில் ஆட்களைச் சேர்க்கிற பொழுது எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்க்கு அறிவித்துவிட்டுதான் ஆட்களை எடுக்கவேண்டுமென்று உத்திரவிருக்கிறது. ஆனுல் அந்த நிறுவனங்கள் அந்த உத்திரவைக் கடைப்பிடிக்காமல் இருக்கின்றன. எனவே அரசாங்கம் உடனடியாக அவர்கள் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ் மூலமாகத்தான் ஆட்களைச் சேர்க்கவேண்டுமென்று உத்தரவிடுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது வேறு பொருள்பற்றிய கேள்வி. தனியாகக் கேட்கவேண்டும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இந்தக் குழுவை நியமிப்பதற்கு முன் நமது மாநில அரசாங்கத்தை மத்திய அரசாங்கம் கலந்துகொண்டதா ? அது சம்பந்தமாக நமது மாநில அரசு ஏதாவது கருத்து தெரிவித்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அப்படி நம்மை முன்கூட்டிக் கலந்ததாகத் தெரியவில்லை.

*1973 மார்ச் 1]*

DR. H. V. HANDE: May I know whether without waiting to implement the plans made by this Committee, whether this Government would take note of the unemployment problem prevalent in this State and whether this Government have got any programme to solve this unemployment problem as early as possible ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த திதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப் பட்டிருக்கிறது. 15 கோடி ரூபாய்க்கு நாம் பல்வேறு துறைகளில் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்க, தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்ப இருக்கிறோம்.

**திரு. என். கே. பழனிசாமி :** சார், ஸ்டேட் பிளானிங் கமிஷனிலே 12 வருஷங்களுக்கு ஆறுயிரம் கோடி ரூபாய் செலவு செய்யப்படுவதாகப் பத்திரிகையிலே அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அதில் 40 கோடி ரூபாய்தான் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காக ஒதுக்கப்பட்டிருப்பது சரியா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** திட்டத்திற்கு ஒதுக்கப்பட வில்லை. Perspective Plan நிறைவேற்றப்படும்பொழுது எவ்வளவு ஒதுக்கலாம், எவ்வளவு தேவை என்பதைப் பார்க்கலாம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இப்படி மேஜைமீது 27 சஜஷன்ஸ் அடங்கிய அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த அறிக்கையை இப்பொழுது வைத்துவிட்டு சப்ளிமெண்ட்ரி கேட்பது என்றால் கஷ்டம். placed on the Table என்று இருப்பதை முதல்நாள் மாலையிலேயே அனுப்புவதற்கு வழி செய்யப்படுமா? அடுத்து இந்த யோசனைப்படி வேலையில்லாத் திண்டாட்டத்தின் காரணமாக, வேலையில்லாமலிருப்பவர்கள் விண்ணப்பம் போட்டால் பணம் வாங்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எலக்ட்ரிசிட்டி போர்டில் கிட்டத்தட்ட ஒரு லட்சத்து இருபதினாயிரம் பேர்கள் 5 ரூபாய் பணம் கட்டி விண்ணப்பம் போட்டிருக்கிறார்கள். அதைத் திருப்பிக் கொடுப்பதற்கு வழி செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதுவரையில் இந்த மன்றத்தில் பின்பற்ற பட்டுவரும் முறையில், பதில் அதிகமாக இருந்தால் மேஜைமேல் வைக்கப் படுகிறது. இனிமேல் வேறுமுறையிலே மாற்ற வேண்டுமென்று விரும்பினால் எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் கூடிப்பேசி முடிவு செய்யலாம். முன்கூட்டியே பதிலை அனுப்பிவிட்டால் சுவையிருக்காது கேட்பதிலே.

[1973 மார்ச் 1

**திரு. எம். சுரேந்திரன் :** சார், வேலைவாய்ப்பு அளிப்பதிலே தற்போதுள்ள நிலைமையைப் பார்த்தால் ஒரு பக்கத்திலே ஒரே குடுபத்திலே பல பேர்கள் வேலையில் உள்ளவர்களாகவும், சில குடும்பங்களிலே ஒருவருக்குக்கூட வேலை யில்லாமலும் இருக்கிற நிலைமை இருக்கிறது. ஆகவே, வேலைவாய்ப்பு அளிப் பதிலே எந்தெந்தக் குடும்பங்களிலே வேலையில்லாதவர்கள் அதிகமாக இருக் கிறார்களோ அவர்களுக்கு முதன்மையிடம் கொடுத்து, ஒரே குடும்பத்திலுள்ள பலபேருக்கு வேலைவாய்ப்பு குவிந்து விடாமல் பார்த்துக் கொள்ளக்கூடிய ஒரு முறையைப்பற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தமிழ்நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் உள்ள அத்தனைபேருக்கும் வேலை கொடுக்க வேண்டும். அதிலே சாதாரணமான நிலைமையில், ஏழ்மை நிலைமையில் உள்ளவர்களுக்கு அதிக வாய்ப்புத்தர வேண்டுமென்பதுதான் நம்முடைய கொள்கை.

**திரு. கே. எஸ். குப்பல் இராமகிருஷ்ணன் :** தலைவரவர்களே, சிலபேர்கள் ஐந்தாறு ஆண்டுகளாக எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சிலே பதிவு செய்து கொண்டிருந்தாலும்கூட அவர்களுடைய பெயர்கள் லிஸ்டிலே சேர்வதில்லை. ஆனால் சிலருடைய பெயர்கள் இரண்டு, மூன்று ஆண்டுகளிலேயே லிஸ்டிலே சேர்க்கப்பட்டு விடுகிறது. எனவே, வேலைக்குப் பதிவு செய்துவிட்டால் ஐந்தாண்டுகளுக்குள் வேலை கிடைக்காவிட்டால் இனிமேல் அவர்கள் பெயர் வராவிட்டாலும் வேலை வாய்ப்பு கொடுக்கலாம் என்ற விதியை ஏற்படுத்துவார் களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** வேலைவாய்ப்புத் தேடித் தரும் அலுவல கத்திலேயிருந்து அப்பொழுதைக்கப்பொழுது பல்வேறு இலாக்காக்கள் கேட்கும்பொழுது அந்தப் பெயர்களை அனுப்புகிறார்கள். இதிலே மாறி மாறி வருகிறது, சில பெயர்கள் வரவில்லை என்பது பெரிய புகார். இதைத் தவிர்ப் பதற்காக, வேலைவாய்ப்பு தேடித் தரும் அலுவலகத்தில் பதிந்துள்ள அத்தனை பேர்களுடைய பெயர்களையும் ஒவ்வொரு ஆண்டிலேயும் நிர்ணயித்து அந்தந்த இலாக்காக்களுக்குக் கொடுத்துவிட்டு, ஆண்டுதோறும் மாறும் அல்லது குறையும் பெயர்களை மட்டும் நம்முடைய வேலைவாய்ப்புத் துறை அனுப்ப வேண்டும், முதலிலே பதிந்து கொண்டவர்களுக்கு வேலை கொடுக்கும் பொறுப்பை அந்தந்த இலாக்காக்களே எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற புதிய கொள்கை பரிசீலனையில் உள்ளது.